**செய்தி வெளியீடு எண்: 88/2025** **நாள்: 27.10.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

## சைதாப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக கூடுதல் நுழைவுவாயில் திறக்கப்பட்டுள்ளது

பயணிகளின் அனுபவத்தையும் செயல்பாட்டுத் திறனையும் மேம்படுத்துவதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இன்று (27.10.2025), சைதாப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக டாட்ஹண்டர் நகர் (Todd Hunter Nagar) நோக்கிச் செல்லும் வகையில் கூடுதலாக ஒரு நுழைவுவாயிலை திறந்துள்ளது.

இந்த வசதியினை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பயணிகளில் ஒருவரான திருமதி. தில்ஷத் பானு அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை ஆலோசகர் திரு. கோபிநாத் மல்யா, (இயக்கம் மற்றும் பராமரிப்பு), பொது மேலாளர் திரு. எஸ். சதீஷ் பிரபு, (இயக்கம் மற்றும் பராமரிப்பு), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை மக்களுக்குப் பாதுகாப்பான, வசதியான, மற்றும் திறமையான பொதுப் போக்குவரத்தை வழங்குவதில் உறுதியுடன் உள்ளது. இந்த புதிய வசதி பயணிகளின் சௌகரியத்தை மேலும் அதிகரிப்பதோடு, அதிகமானோர் தங்கள் தினசரி பயணத்திற்கு மெட்ரோ இரயிலைத் தேர்ந்தெடுக்க ஊக்கமளிக்கும்.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**